மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) எழுத்தர்கள் 58, தட்டெழுத்தர்கள் 17.

(இ) நெல் கொள்முதல் சம்பந்தப்பட்ட பிரிவும் தாலுகா களிடையே அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகளும் நீக்கப்பட்டமையால், அப் பிரிவுகளில் பணியாற்றிய அலுவலர் கள் தற்காலிகமாக வேலையிழந்தனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இப்படி வேலையிழந்தவர்களுக்கு மீண்டும் நெல் கொள்முதல் வேலை ஆரம் பித்தவுடன் வேலை கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1968 ஜூன் 1-ஆம் தேதி முதல் 1968 ஆகஸ்ட் 29-ஆம் தேதி வரை மூன்று மாதங்கள் வேலை யில்லாமல் இருந்தது. மீண்டும் குறுவை நெல் கொள்முதல் ஆரம்பமானவுடன் அந்த அனைவரும் இப்போது வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

Rupee one per measure of rice

* 182. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Devakottai Additional First-Class Magistrate has sentenced in October 1968, one Thiru Naganathan of Paramakudi, to undergo four months rigorous imprisonment for having collected a certain amount, promising falsely to give one measure of rice per rupee; and

(*b*) if so, whether the persons receiving money from the public with the false promise of " Rupee one per measure of rice ", will be punished?

ரூபாய்க்குப் படி அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி தருவதாகக் கூறி பணம் வாங்கி ஏமாற்றிய குற்றத்திற்காக பரமக்குடியைச் சேர்ந்த நாகநாதன் என்பவருக்கு தேவகோட்டை ஆடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் 4 மாத கடுங்காவல் தண்டனை 1968 அக்டோ பரில் விதித்தாரா ?

(இ) ஆமெனில், இதுபோன்று படி அரிசி போடுவதாகக் கூறி பணம் வாங்கி ஏமாற்றுபவர்கள் தண்டிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) ஆம். இதைப்போன்றோ அல்லது வேறு எந்த முறை யிலோ ஏமாற்றினாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

11th March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பணம் வாங்காமலேயே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போடாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படியிருந்தும் கூட மக்கள் பரிசைத்தான் அளித்திருக்கிறார்கள் கடந்த இடைத் தேர்தல்களிலே.

Construction of houses for Harijans

* 183. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the news item which appeared in the "Navamani" of Madras, dated 8th August 1968 to the effect that the Hon. the Minister for Harijan Welfare had stated that the Government would give assistance for constructing houses at a cost of Rs. 3,000, if the Harijans deposited Rs. 400, is correct; and

(b) if so, the details thereof?

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசனங்கள் ரூ. 400 டிபாசிட் செய்தால் ரூ. 3,000-த்தில் வீடு கட்ட அரசு உதவும் என அரிசன நல அமைச்சர் கூறியதாக 1968 ஆகஸ்ட் 8-ஆம் தேதி சென்னை நவமணி நாளிதழில் வெளியான செய்தி சரியா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ), (இ) இது குறித்த ஒரு செயற்குறிப்பு இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த பத்திரிகைச் செய்தியைப் பார்த்தவுடனேயே 400 ரூபாய் டிபாசிட் செய்தால் ரூ. 3,000-க்கு வீடு கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஏழை எளிய அரிஜன மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏமாற்றம் இல்லாத முறையில் வீடு கட்டிக்கொள்ள அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு கனம் உறுப்பினர் அவர்கள் டில்லி அரசாங்கத்தில் தனது கட்சியின் பலத்தை வைத்துக்கொண்டு அந்தத் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெற்றுத்தந்தால், அரிஜன மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகமாட்டார்கள்.